சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிசே) ஈப்பு எண்.TN.09-G-0556 முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்தல் ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–4) துறை

அரசாணை(டி) எண். 130 நாள்: 15.3. 2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.2275, உள் (போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990.
2. இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை–42, கடித செ.மு.ஆ.எண்.ஏ1/6148/08, நாள் 31.3.2008.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் கடிதம் ந.க.எண்.42092/2007/பிடி1, நாள் 1.9.2009.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், கடித ந.க.எண்.63716/09/பரா அ–2.5, நாள் 2.10.2009.

******

ஆணை:

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிசே) அவர்களின் ஈப்பு எண்.TN.09 - G-0556 மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால், முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி வாகனம் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், துறைத் தலைவர் மூலமாக அரசிற்கு கருத்துரு அனுப்பி, வாகனம் கழிவு நீக்கம் செய்ய ஆணை பெறப்பட வேண்டும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலும் தெரிவித்துள்ளார். எனவே திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிசே) அவர்களின் ஈப்பு எண். TN.09 - G-0556 முதிரா நிலையில் நிலையில் கழிவு நீக்கம் செய்து ஆணை வழங்குமாறு அரசை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஈப்பு வாங்கப்பட்டு 10 வருடங்கள் அல்லது ஈப்பு 2.5 இலட்சம் கி.மீ ஓடியது இதில் எது பிந்தியதோ அப்போது வாகனம் கழிவு நீக்கம் செய்ய தகுதியுடையதாகும். இந்நேர்வில் மேற்குறிப்பிட்ட ஈப்பு 1997–ம் ஆண்டு வாங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வாகனம் 1,32,920 கி.மீட்டர் மட்டுமே ஓடியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்த பின்னர் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிசே) அவர்களின் ஈப்பு எண்.TN.09-G-0556 ஐ முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை உள்(போக்குவரத்து) துறையின் அலுவல் சார்பற்ற எண்.83061/போக்குவரத்து 4/2009–1, நாள் 4.11.2009 மற்றும் நிதி துறையின் அலுவல் சார்பற்ற எண்.65733/ஊவ/2009–1, நாள் 11.2.2010–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15,
இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை–42,
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம்,
மாநில கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்</u>
மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிசே), திருவள்ளூர் மாவட்டம்.
உள்(போக்குவரத்து 4) துறை, சென்னை–9,
நிதி (ஊவ) துறை, சென்னை–9,
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.